குறள் நெறியே நம்நெறி.

# குறள் மலர்

V.S.N

விசுவாவசு; மாசி-பங்குனி இணைப்பிதழ்.

# திருக்குறள்

## அறத்துப்பால்

8

## இல்லற இயல்.

௮

## அன்புடைமை

மாலை-1

மலர்-8

நந்தி துருகம்
உரிகம் அஞ்சல்
கோலார் தங்கவயல்
(மைசூர் மாநிலம்)

பதிப்பாசிரியர்:
திருக்குறள்மணி,
அ. இரத்தினசபாபதி

# மலரைப்பற்றி.

பல தமிழ் அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு, திருக்குறளுக்குத் தெளிவுரையொன்றைத்தவருமல் தாங்கள் வெளியிட்டு வரும் பணியைப் போற்றுகிறேன் கன்னட நாட்டில் வாழும் தாங்கள் இப்பணியைச் சிறப்பாகச் செய்துவருவதை நினைத்து மிகவும் பெருமைப்படுகிறேன். பலர் எழுதும் உரையில் செறிவும் தரமும் காண்பது அரிது. தங்கள் வெளியீட்டில் இவற்றைக்கண்டு மகிழ்ந்தேன். பல அறிஞர்களை அறிமுகப்படுத்தும் பணியும் இம்முயற்சியில் மறைமுகமாகக் கலந்து இருக்கிறது. இளைஞர்களுக்கு இவ்வறிமுகம் ஊக்கந்தரும் தமிழ் வளர்ச்சியில் அபிமானமுடைய தனி மனிதர்களும் நிறுவனங்களும் தங்கள் பணிக்கு உதவக் கடமைப் பட்டுள்ளனர்.

இங்ஙனம் அன்பன்,

வி. ஐ. சுப்பிரமணியம்,

எம் ஏ; பி. எச் டி,

(IND. U. S. A)

தமிழ்த்துறைத் தலைவர்,

கேரளப் பல்கலைக் கழகம்,

திருவனந்தபுரம்.

'குறள் மலர்' என்னும் பெயருடன் கோலாரிருந்து வரும் திங்கள் வெளியீட்டைப் பார்த்தேன். அந்தத் திங்கள் இதழில் ஓர் அதிகாரம் உள்ளது. அதன் பத்துக் குறட்பாக்களுக்கும் ஆசிரியர் பதின்மர் விளக்கவுரை வரைந்துள்ளனர். விளக்கவுரை மிகவும் தெளிவாக அமைந்துள்ளது. இது மாணவர் உட்பட அனைவருக்கும் பயன்தரும். இது நல்ல முயற்சி; இப்புதிய முயற்சியில் ஈடுபட்டுள்ள 'குறள் மலர்' ஆசிரியர்க்கு என் பாராட்டு உரியது.''

டாக்டர், மா. இராசமாணிக்கனுர்,

எம். ஏ; எல். டி. எம். ஓ. எல். பி. எச். டி.,

தமிழ்ப் பேராசிரியர்,

(Reader in Tamil)

சென்னைப் பல்கலைக் கழகம்,

சென்னை.

# குறள் மலர்

திருக்குறள் விளக்கம்

மாலை-1 | விசுவாவசு; மாசி-பங்குனி | மலர்-8


## 8 அன்புடைமை.

1. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ்? ஆர்வலர்
புன்கண்ணீர் பூசல் தரும். (71)

2. அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (72)

3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆர்உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. (73)

4. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அது ஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு. (74)

5. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. (75)

6. 'அறத்திற்கே அன்புசார்பு' என்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை. (76)

7. என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம். (77)

8. அன்பு அகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று. (78)

9. புறத்து உறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துஉறுப்பு அன்பு இலவர்க்கு? (79)

10. அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (80)

ஆசிரியர் குறிப்பு:

# அன்புடைமை.

"அன்புடைமை" என்னும் பொதுத் தலைப்பிற்குக் கிடைத்துள்ள சிலரது உரைக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

**பரிமேலழகர்:-** "அஃதாவது, அவ்வாழ்க்கைத் துணையும் புதல் வரும் முதலிய தொடர்புடையார்கண் காதலுடையனாதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். இல்லறம் இனிது நடத்தலும் பிற வுயிர்கண்மேல் அருள் பிறத்தலும் அன்பின் பயனாகலின், இது வேண் டப்பட்டது. வாழ்க்கைத் துணைமேல் அன்பில்வழி இல்லறம் இனிது நடவாமை "அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலுந் துறவோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த வென்னை" (சிலப்பதிகாரம்-கொலைக்; 71-73) என்பதனானும், அதனால ருள் பிறத்தல் "அருளென்னும் அன்பீன் குழவி" (குறள். 757) என்பத னானும் அறிக."

**மணக்குடவர்:-** "அன்புடைமையாவது தன்னைச் சார்ந்தார் மாட் டுக் காதலுடையவனாதல்"

**பரிப்பெருமாள்:-** எல்லாக் குணங்களிலும் சிறந்ததாகலின் முற் படக் கூறினார். அன்பு சிறந்தவாறு என்னையெனின், ஈண்டுக் கூறு கின்ற அறம் தானமாகலின், அஃது அன்பிலாதவர் மாட்டுச்சென்று ஏற்பாரிலர் ஆதலால் சிறந்ததாயிற்று என்க."

**பழைய உரை.-** "தன் புதல்வரிடத்து அன்புடைமை உயிர்களிடந் தோறும் உண்டாக வேண்டுமாதலின் அன்புடைமையாயிற்று."

**பருதியார்:-** "அன்புடைமையாவது புதல்வரிடத்திலே அன்பு டைமை. ஆத்மாக்களிடந்தோறும் உண்டாகவேணும் ஆதலால் அன்பு டமையாயிற்று."

★ ★ ★ ★

இவ்வதிகாரத்தில் வரும் ஒன்பதாவது குறளான "புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும்..." என்னும் குறட்பா வள்ளுவர் பெருமானின் தூயஅன்பு நெஞ்சத்தைப் படம்பிடித்துக் காட்டுவதாகும். வள்ளுவர் தம் அறவாழ்வின் அடிப்படை "மனத்துக்கண் மாசிலன் ஆதல்" (குறள்; 34) என்பதேயாகும். இதனை, முன்பே "அறன் வலியுறுத்தல்" எனும் 4-ஆவது அதிகாரத்திற்கு விளக்கவுரை தாங்கி வெளிப்போந்த மலரில் சிறப்பாகக் குறித்துள்ளோம்.

இங்கு "அன்புடைமை" அதிகாரத்திலும் அதே கருத்தை வள்ளுவர் வலியுறுத்தக் காண்கின்றோம். அன்புடைமையின் சிறப்பையும் அது இல்லாவிடத்துவரும் இழிவையும் பல கோணங்களிலிருந்து விளக்கியருளியவர், இவ்வதிகாரத்தின் 9-ஆவது குறளில்,'உடம்பிற்கு அகத்து உறுப்பு அன்பு; அன்பு இல்லாதார்க்கு உடம்பின் புறத்து உறுப்புக்களாகிய கண், மூக்கு, காது, வாய் முதலிய இவையெல்லாம் ஒரு பயனையும் தரமாட்டா என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். மனத்தை அகத்து உறுப்பு என்பர்; அவ்வுறுப்பில் அன்பு இல்லையெனில், புறத்து உறுப்புக்கள் இருந்தும் பயனில்லை என்றார். (அதி. 1-குறள். 9 போல)

தனி மனிதன் ஒவ்வொருவனின் நெஞ்சத் தூய்மையும் அன்புமே வள்ளுவர் பெருமானின் கவனத்தைச் சிறப்பாகக் கவர்ந்தன என்பதை நாம் அறிந்து தெளிதல் வேண்டும்.

"தனித்தனியோரின் வஞ்சனை போக்கி நெஞ்சத் தூய்மை செய்வதே வள்ளுவம்"

—டாக்டர், வ. சுப. மாணிக்கம்,
எம். ஏ. எம். ஓ. எல்; பி. எச். டி;
(வள்ளுவம்)

---

"What though the body each perfection own,
If in the breast, the beauty of the mind,
Sweet love exist mot?" ★

---

[பக்கம் நான்கின் தொடர்ச்சி]

அன்பு கண்ணுக்குப் புலனாகாததாகும், எனினும், அதை அனுமானத்தால் உணரலாம் என்பதை இக்குறள் உணர்த்துகின்றது. நம் உள்ளன்பிற்குரியவர்கள் பெருந்துன்பம் எய்தி வேதனையுறும்போது நம்மையறியாமலேயே நம் கண்களிலிருந்து நீர் பெருகுவதுஇயல்பேயாம். அதனை நாம் அடக்க முயன்றாலும் நம் ஆற்றலையும் மீறி அது வெளிப்படுகிறது. அங்ஙனம் பெருக்கெடுக்கும் கண்ணீரைக்கொண்டு நம் அன்பின் மிகுதியைப் பிறர் உணர்ந்து கொள்வர்.

இக்குறட்பா உண்மை அன்பின் இயல்பை உணர்த்துவதாகும்.

---

Is there any fastening that can shut in love? The sorrowful tear of the affectionate will publish the love that is within.

—(ரெவ ட்ரூ, +லாசரஸ்) ★

# அன்பிற்கும் உண்டோ...

டாக்டர், தா. ஏ. ஞானமூர்த்தி எம். ஏ., பி. எச். டி
பேராசிரியர்; தமிழ்த்துறைத் தலைவர்.
பி. எஸ். ஜி. கலைக்கல்லூரி,
கோயம்புத்தூர்.

குறள்-1. அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (71)

பரிமேலழகர் உரை:- "அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ-அன்பிற்கும் பிறரறியாமல் அடைத்து வைக்கும் தாழுளதோ? ஆர்வலர் புன்கணீர் பூசல்தரும்-தம்மால் அன்பு செய்யப்பட்டாரது துன்பங் கண்டுழி அன்புடையார் கண்பொழிகின்ற புல்லிய கண்ணீரே உண்ணின்ற அன்பினை எல்லாரும் அறியத் தூற்றும் ஆதலான்.

உம்மை சிறப்பின்கண் வந்தது: ஆர்வலரது புன்மை கண்ணீர்மேல் ஏற்றப்பட்டது. காட்சியளவைக்கு எய்தாதாயினும் அநுமான அளவையான் வெளிப்படுமென்பதாம். இதனால் அன்பினதுண்மை கூறப்பட்டது." – ஆர்.

'அன்பிற்குப் பிறர் அறியாமல் அடைத்து வைக்கும் தாழ்ப்பாள் இல்லை. அன்புக்குரியவர்களுடைய துன்பத்தைக் கண்டபோது அதைத் தாங்க இயலாமல், அன்புடையவர்களுடைய கண்களிலிருந்து பொழிகின்ற நீர் அவர்தம் உள்ளத்துள்ள உண்மை அன்பினை எல்லோரும் அறியுமாறு செய்துவிடும்' என்பது இக்குறளின் பொருளாம்.

மக்கள் ஒன்றி வாழும் இயல்புடையவர். அவர்கள் இனிதே ஒன்றி வாழ்வதற்கு அடிப்படையாய் அமைவது அன்பேயாம். அன்பில்லையேல் உலகில் விலங்கு நீர்மை மிகுந்து விரைவில் அது அழிந்துபடும்.

இவ்வன்பு முதற்கண் குடும்பத்தில் அரும்ப வேண்டும் என்பது திருவள்ளுவரின் உட்கிடக்கை. எனவே, அவர் அதனை இல்லறத்திற்கு இன்றியமையாப் பண்பாகக் கூறியுள்ளார். கணவன், மனைவி, மக்கள் இன்னோரன்னவர்களிடையே அன்பு நிறைந்திருந்தாலன்றி இல்லறம் இனிதே நடவாதன்றோ? தன்பால் தன் கணவனுக்கு அன்பில்லாததனால் தான் அறவோர்க்கு உதவி அளித்தலும், அந்தணரைப் பேணுதலும், துறவிகளை ஆதரித்தலும், விருந்தினரை ஓம்புதலுமாகிய இல்லறத்திற்குரிய அறங்கள் நடைபெறவில்லை என்று கண்ணகி மனம் நொந்து கூறுகிறாள். "அறவோர்க் களித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க் கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை" என்பது சிலப்பதிகாரம்.

[பக்கம் மூன்றில் காண்க]

# அன்பிலார்... அன்புடையார்...

திருமதி, ஆர். இந்திராணி. எம் ஏ.,
தமிழ் விரிவுரையாளர்,
சீமாட்டி ஸ்ரீராம் கல்லூரி,
புதுதில்லி-14.

குறள்-2. அன்புஇலார் எல்லாம் தமக்குஉரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (72)

[பரிமேலழகர் உரை:- அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்-அன்பிலாதார் பிறர்க்குப் பயன்படாமையின் எல்லாப் பொருளானுந் தமக்கேயுரியர். அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்-அன்புடையார் அவற்றானேயன்றித் தம்முடம்பானும் பிறர்க்குரியர்,

ஆனுருபுகளும் பிரிநிலையேகாரமும் விகாரத்தால் தொக்கன; என்பு ஆகுபெயர். என்புமுரியராதல் "தன்னகம் புக்க குறு நடைப் புறவின் தபுதி யஞ்சிச் சீரை புக்கோன்" (புறநா, 43)"—ஆசிரியர் ]

அன்பிலார் எல்லாவற்றாலும் தமக்கே உரியவர்; அன்புடையார் தம் உடம்பையும் பிறர்க்குரியதாக்குவர். தமக்காகவே வாழ்கின்றவர் அன்பிலார்; தமக்கென்று எதுவுமே இல்லாமல் பிறர்க்காகவே வாழ்கின்றவர் அன்புடையார்.

மனிதனின் முயற்சியினாலோ, ஊழ்வினைப் பயனாலோ பல பொருள்கள் அவனை வந்தடைகின்றன; சில அவனைவிட்டு நீங்குகின்றன. ஆனால், இறக்கும் வரையில் அவனுடன் அவனுக்குச் சொந்தமாக இருப்பது அவன் உடலே. அன்புடையார், இடையில் வந்து போகும் பொருளையே அன்றி, தமக்கே சொந்தமான உடம்பையும் பிறர்க்குப் பயன்படும் வகையில் கொடுப்பார். அன்பிலாதார், தமக்கே ஒரு காலத்தில் சொந்தமில்லாமல் போகும் பொருளைக் கூடப் பிறர்க்கு உதவமாட்டார்கள்.

இதன் மூலம், அன்பிலாதாரின் மனச் சுருக்கத்தையும் அன்புடையாரின் மன விரிவையும் காட்டுகிறார் வள்ளுவர். தன்னலத்தை அழிக்கக் கூடியது அன்பு ஒன்றே.

அன்பிலார் தமக்குரிய பொருளைப் பிறர்க்கு ஈதலில்லா நிலையோடு பிறர்க்குரிய பொருளையும், முறையற்ற வழியிலும் தமக்குரியதாக ஆக்கிக் கொள்ள முனைவர். பழைய இலக்கியங்களில், பாலை வழியில் குறுக்கிட்டு வழிப்போக்கர்களின் பொருளை வவ்வும் ஆறலைக் கள்வரே 'அன்பிலார்' என்று குறிக்கப் படுகின்றனர்.

[பக்கம் ஆறில் காண்க]

# அன்போ டியைந்த...

மணிமன்றத்திறைவனர்,
நெல்லை கிழான்.

குறள்-3. அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆர்உயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. (73)

[பரிமேலழகர்:- "ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு—பெறுதற்கரிய மக்களுயிர்க்கு உடம்போடுண்டாகிய தொடர்ச்சியினை; அன்போடு இயைந்த வழக்கு என்ப—அன்போடு பொருந்துதற்கு வந்த நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்.

[பக்கம் ஏழில் காண்க]

[பக்கம் ஐந்தின் தொடர்ச்சி]

அன்புடையார், அன்பு செலுத்துகின்றவர்களுக்குப் பொருளைக் கொடுப்பதுடன், அன்பு செலுத்துகின்றவர்களுக்காகப் பொருளைக் கொடுக்கும் நிலையும் உண்டு. பாபர், நோய்வாய்ப்பட்ட அன்பு மகன் பிழைக்கவேண்டித் தம் உயிரையே கொடுக்க முன் வந்தார்.

இலக்கிய தசரதன்-கண்ணின்மணி போன்ற இராமனைக் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கைகேயி கேட்டபோது:

"கண்ணே வேண்டும் எனினும் ஈயக் கடவேன்
உள்நேர் ஆவி வேண்டினும் இன்றே உனதன்றோ"

என்று, கண்ணைக் கேள். உயிரைக்கேள்-எதை வேண்டுமானாலும் அவனுக்காகத் தருவேன். - ஆனல், அவனை மட்டும் என்னிடமிருந்து பிரித்துக் காட்டுக்கு அனுப்பி விடாதே என்று மன்றாடுகிறான்.

அன்பின் இறுதிப்படியாகிய பக்தி நிலையில் இறைவனுடைய கண்களிலிருந்து குருதி வடிவதைக் கண்டல்லவா தம்முடைய கண்களைப் பெயர்த்து வைத்துப் பெருமை பெற்றார் கண்ணப்பர்!

இக்குறளில், அன்புக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுக்க முன்வந்து நிறைவான வாழ்வு வாழும் அன்புடையாரையும், நெஞ்சில் இருக்கவேண்டிய பொருளாகிய அன்பை இல்லாமல் செய்துவிட்டு, உலகத்துப் பொருள்களையெல்லாம் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டும் நிறைவற்ற வாழ்வு வாழும் அன்பிலாரையும் அழகாகப் படம் பிடித்துக் காட்டுகிறார் வள்ளுவர்.

---

The loveless are selfish and have all to themselves., the loving ones sacrifice even the bones of their body for others. (M. S. P.). ★

[பக்கம் ஆறின் தொடர்ச்சி]

"பிறப்பினது அருமை பிறந்த உயிர்மேல் ஏற்றப்பட்டது. 'இயைந்த' என்பது உபசார வழக்கு. 'வழக்கு' ஆகுபெயர். உடம்போடியைந்து அல்லது அன்பு செய்யல் ஆகாமையின், அது செய்தற்பொருட்டு இத் தொடர்ச்சி உளதாயிற்று என்பதாம். ஆகவே, இத்தொடர்ச்சிக்குப் பயன் அன்பு உடைமை யென்றாயிற்று " – ஆ-ர்]

"அரிதரிது மானிடராய் பிறப்பதரிது" மனிதன் உருவை ஓர் ஓவியன் திரைச்சீலையில் தீட்டுகின்றான், சிற்பி ஒருவன் கல்லிற் செதுக்குகின்றான். அவ்வுருவை 'மனிதன்' என்று நாம்கூறுகின்றோமில்லை. ஏன்? அவ்வுருவிற்கு உயிரில்லை. உயிர்நீங்கிய மனிதனின் உடலை நோக்கி மனிதன் என்று கூறாமல் 'பிணம்' என்றே கூறுகின்றோம். எனவே உயிர்க்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு இன்றியமையாதது. அத்தொடர்புபோன்றதே மனிதனுக்கும் அன்பிற்கும் உள்ளதொடர்பு. அகத்தில் அன்பில்லாமனிதனை மனிதன் என்று மதிக்கக் கூசுகிறது வள்ளுவர் மனம். அது மனித எலும்புக் கூட்டின் மேல் தோல்போர்த்த ஏதோ ஒன்று என்று இகழ்ச்சி தோன்ற மதிக்கிறார் அவர். இதனை இவ்வதிகாரத்தின் இறுதிக் குறளில் "என்புதோல் போர்த்த உடம்பு" என்று கூறக் காண்கின்றோம்.

'மனிதனாகப் பிறந்த ஒருவன், அகத்தில் அன்புடையவனாக இருத்தல்வேண்டும். அவ்வாறில்லாதவன் பிறந்திருக்கவே வேண்டாம்'என்று குறள்யாத்த கோமானின் உள்ளம் குமுறுவதை நாம் இங்கே காண்கின்றோம்.

மற்றும், உடல் நிலைத்திருத்தற்கு உயிர் இன்றியமையாததைப் போன்று, உயிர் நிலைத்திருத்தற்கு அன்பு இன்றியமையாதது என்பது வள்ளுவர் உள்ளம்.'அன்பின் வழியது உயிர்நிலை'என்றும் இவ்வதிகார இறுதிக் குறள் இக் கருத்தை வெளிப்படையாகப் பேசக் காண்கிறோம். இன்னும் 'புறத்துறுப் பெல்லாம்' என்று தொடங்கும் இவ்வதிகார ஒன்பதாவது குறளிலும் இதனையே வேறு கோணத்திலிருந்து காட்டுகிறார் ஆசிரியர்.

"அன்புடை ஆருயிர் அரசர்க் கருளிய
என்புடை யாக்கை யிருந்தது காணாய்"

(மணி. ஆபுத்திர. 170-171)

"என்பென்ப தியாக்கை என்ப துயிரென்பது இவைகளெல்லாம்
பின்பென்ப அல்ல வேனும் தம்முடை நிலையிற்பேரா
முன்பென்ப உளதென் றாலும் முழுவதும் தெரிந்த வாற்றால்
அன்பென்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிந்தது அன்றால்."

(கம்ப. யுத்த. மருத். 4)

அன்புடன் அமைந்து வாழும் வாழ்வின் பயனே, உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தமாம் என்பது இக்குறட்பாவின் திரண்ட கருத்தாம்

---

They say that the union of soul and body in man is the fruit of the union of love and virtue (in a former birth).

(Rev. Drew + J. Lazarus) ★

# அன்பீனும் ஆர்வமுடைமை...

பேராசிரியர், க. பெருமாள். எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
அரசினர் கலைக் கல்லூரி, சென்னை-2

குறள்-4. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அது ஈனும்
நண்புஎன்னும் நாடாச் சிறப்பு. (74)

[பரிமேலழகர் உரை:- "அன்பு ஆர்வமுடைமை ஈனும்-ஒருவனுக்குத் தொடர்புடையார் மாட்டுச் செய்த அன்பு அத்தன்மையாற் பிறர் மாட்டும் விருப்பமுடைமையைத் தரும். அது நண்பு என்னும் நாடாச் சிறப்பு ஈனும்-அவ்விருப்பமுடைமைதான் இவற்குப் பகைமையும் நொதுமலும் இல்லையாய் யாவரும் நண்பென்று சொல்லப்படும் அளவிறந்த சிறப்பினைத் தரும்.

"உடைமை உடையனுந்தன்மை.யாவரும் நண்பாதல் எல்லாப் பொருளும் எய்துதற்கு ஏதுவாகலின, அதனை நாடாச் சிறப்பு என்றார்"

— ஆசிரியர்.

இக்குறளை, 'அன்பு ஆர்வமுடைமை ஈனும்' என்றும், 'அது நண்பென்னும் நாடாச்சிறப்பு ஈனும்' என்றும் இரண்டு தொடராகப் பிரித்துக் கொள்ளுதல் வேண்டும். முதல் தொடருக்கு 'அன்பு விருப்பமுடைமையை உண்டாக்கும்' என்றும், இரண்டாவது தொடருக்கு 'அவ்விருப்பமுடைமை நட்பு என்னும் அளவிறந்த சிறப்பினை உண்டாக்கும்' என்றும் பொருள் கொள்ளுதல் வேண்டும். முதல் தொடரில் 'அன்பு' எழுவாய்; 'ஈனும்' பயனிலை; 'ஆர்வமுடைமை' செயப்படுபொருள். இரண்டாவது தொடரில் 'அது' (ஆர்வமுடைமை) எழுவாய்; 'ஈனும்' பயனிலை; 'நண்பென்னும் நாடாச் சிறப்பு' செயப்படுபொருள்.

'அன்பு' என்பது அருட்கு முதலாகி மனத்தில் நிகழும் நேயம் ஆகும். நெஞ்சத்தின் அடிப்படைப் பண்புகளுள் தலைமை சான்றது அன்பே. அதிலிருந்து கிளைப்பனவே ஏனைய எல்லாப் பண்புகளும்.

"என்பு தோலுடை யார்க்கும் இல்லார்க்குந் தம்
வன்ப கைப்புலன் மாசற மாய்ப்பது என்?
முன்பு நின்றுயர் மூன்றுல கத்தினும்
அன்பி னல்லதோர் ஆக்கமுண் டாகுமோ"

(மந்தரை சூழ்ச்சிப் படலம்-பாட்டு 16)

[பக்கம் ஒன்பதில் காண்க]

[பக்கம் எட்டின் தொடர்ச்சி]

இது, வசிட்டர் இராமனுக்கு உரைத்த அறிவுரைகளுள் ஒன்றாகும். இதில், அன்பைவிட மேலானதோர் ஆக்கம் மூன்றுலகிலும் இல்லையென்று வரையறுத்துக் கூறிவிட்டார் கம்பர். இவ்வளவு பெருமை வாய்ந்த அன்பு ஆர்வமுடைமையை உண்டாக்கும்; அவ்வார்வமுடைமை நட்புரிமையை உண்டாக்கும்; நட்புரிமை அளவற்ற சிறப்புக்களை உண்டாக்கும் என்பதே இக்குறளின் திரண்ட கருத்தாகும். நட்பின் அருமை பெருமைகளை வள்ளுவர் விதிமுகத்தானும் எதிர்மறை முகத்தானும் 170 குறள்களில் விரித்துக் கூறி விளக்கியுள்ளார். (அவற்றைப் பொருளதிகாரத்தில் காண்க)

'ஈனும்' என்பதற்கு உண்டாக்கும் அல்லது பெற்றுத்தரும் என்பது பொருள்.

'ஆர்வம்' என்பதற்கு விருப்பம் என்பது பொருள்.

'நண்பு' எனினும் நட்பு எனினும் ஒன்றே. நட்பு, கேண்மை, கிளைமை, தொடர்பு என்பன ஒருபொருட் சொற்களாகும். நட்பால் ஆகாதது ஒன்றுமே இல்லை. இதனை,

'செயற்கரிய யாவுள நட்பின்' (குறள் 781) என்பதனாலும் அறியலாம். 'நாடாச் சிறப்பு' என்பதற்கு, ஆராய்ந்து அளவிட முடியாத சிறப்பு என்பது பொருள்.

உடைமை-அன்பு, ஆர்வம் நட்பு ஆகிய இவை உயிரில் தோன்றி உயிருடனிருந்து. உயிருடன் பிரியாமல் தொடர்ந்து செல்லும் உடைமைகள் ஆகும். கபிலர் பாரி இவர்கள் தம் நட்பும், பிசிராந்தையார், கோப்பெருஞ் சோழன் இவர்கள் தம் நட்பும் உயிரோடு தொடர்ந்து செல்லும் நட்புக்கு எடுத்துக்காட்டாகும்.

''முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்'' (நற்றிணை 355) என்பதனால் நட்பின் ஆற்றலையும் பெருமிதத்தையும் உணரலாம்.

---

Love begets desire., and that (desire) begets the immeasurable exellence of friendship, (R. D.),

# அன்புற்றமர்ந்த...

திரு. பழநி-அரங்கசாமி. பி. ஓ எல் எம். ஏ;
(ஆங்கிலம்)
ஆங்கில விரிவுரையாளர்,
பழனியாண்டவர் கலைக் கல்லூரி,
பழநி.

குறள்-5. அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து
இன்புற்றார் எய்தும் சிறப்பு. (75)

[பரிமேலழகர்:- "அன்பு உற்று அமர்ந்த வழக்கு என்ப-அன்புடையராய் இல்லறத்தோடு பொருந்திய நெறியின் பயனென்று சொல்லுவர் அறிந்தோர்; வையகத்து இன்பு உற்றார் எய்தும் சிறப்பு-இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கண் நின்று இன்பநுகர்ந்து அதன்மேல் துறக்கத்துச் சென்றெய்தும் பேரின்பத்தினை.

வழக்கு ஆகுபெயர். இல்வாழ்க்கைக்கண் நின்று மனைவியோடும் மக்களோடும் ஒக்கலோடுங்கூட இன்புற்றார் தாம் செய்த வேள்வித் தொழிலால் தேவராய் ஆண்டும் இன்புறுவராகலின், இன்புற்றாரெய்துஞ் சிறப்பு என்றார். தவத்தால் துன்புற்றெய்துந் துறக்க இன்பத்தினை ஈண்டும் இன்புற்றெய்தல் அன்பானன்றி இல்லை என்பதாம் என்றவாறு."—ஆசிரியர்]

பொருள்:- உலகத்தில் இன்பத்தை நுகர்ந்தவர்கள் பெறுகின்ற உயர்வினை, அன்போடு இயைந்த வாழ்க்கையின் வழிமுறைமை என்பர் அறிஞர்.

விளக்கம்:- மண்ணும், பெண்ணும், பொன்னும் பொருளும் உலக இன்பத்தைத் தருவன. ஆனால், இவற்றின் மீது அளவற்ற ஆசை வைத்தவர் வாழ்வின் இறுதியில் நிம்மதியோடு மடிந்ததில்லை. அவரெய்திய மகிழ்வும் நீரிற் குமிழியனையது. அவரிடத்தே தோன்றிய ஆசை உள்ளீடற்ற போலி மகிழ்ச்சியே கொடுக்கும் என்பதன்றிப் புகலிடம் கொடுத்தார்க்கும் நிம்மதியைக் குலைத்துப் பேராசைக்கண் இழுத்துப் புன்மை தரும் புல்லியது. இவ்வுண்மையை,

"ஆசைக்கோர் அளவில்லை அகிலமெலாங்
கட்டி ஆளினும் கடல் மீதில்
ஆணை செலவே நினைவர் அளகேசன் நிகராக
அம்பொன் மிகவைத்த பேரும்

[பக்கம் பதினொன்றில் காண்க]

[பக்கம் பத்தின் தொடர்ச்சி]

நேசித்து ரசவாத வித்தைக் கலந்திடுவர் நெடு
நாளிருந்த பேரும்
நிலையாக வேயினும் காயகல்பந் தேடிநெஞ்சு
புண்ணுவ ரெல்லாம்.''

என்ற தாயுமானவரின் அருள்வாக்கு உறுதிப்படுத்துகிறது. ஆசை வழிப்பட்ட மனிதன் இன்பத்தைத் தன் காலத்தே நுகர்ந்தாலும், எக்காலமும் போற்றுகின்ற விழுமிய சிறப்பினை எய்துதற்கில்லை. தூண்டிற் புழுவினுக்குத் துள்ளிவிழுகின்ற மீனைப்போல் புலநெறிப்பட்டுப் புன்மையுற்ற வரலாற்றுப் பொம்மைகள் அநேகர். உலகத்தின் பெரும் பகுதியைக் கட்டியாள எண்ணிய மாவீரன் அலெக்சாந்தர், பெண்வழிச் சேர்ந்து பேதமையுற்று மடிந்த ரோம் நாட்டுப் பெருவீரன் ஆண்டனி, பிரான்சு நாட்டிலே குருதி கொட்டப் போரிட்ட நெப்போலியன் ஆகியோர் வரலாறு காட்டுகின்ற மாவீரர்கள்தான். அவர்தம் வீரத்தை மெச்சுகின்ற மக்கட் சமுதாயம் அவர்கட்கு மண்டியிடுவதில்லை. இவரெல்லாம் 'வையகத்து இன்புற்றார்'தான். ஆனால், 'சிறப்பு' எய்தியவரில்லை.

வாழ்வில் இன்பமும் அடைந்து சிறப்பும் எய்துகின்ற மிக உயர்ந்த நிலை அன்பு ஒன்றினாலேதான் பெறப்படுவது. வரலாறு காட்டுகின்ற மாவீரர்கட்கு மண்டியிடாத மக்களினம் புத்தருக்கும், வள்ளுவருக்கும், இயேசுவுக்கும். காந்திக்கும் செங்கை குவித்துச் சென்னி தாழ்த்திச் சிந்தை குளிர்ந்து வணங்குகிறது. இவர்தம் வாழ்க்கையெல்லாம், அன்பினை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கையின் வழிமுறைமை. காலமெல்லாம் தோன்றி வளரும் மக்கட் சமுதாயம் அன்புற்றமர்ந்த இப் பேரறிஞர்தம் வாழ்க்கை நெறிகளைத்தான் வழிமுறையாகத் தொடர்ந்து பின்பற்றும் என்பது உறுதி. ஐம்புல வேடர்களின்பால் அலைக்கழிக்கப் படும் ஆன்மாக்கள், அன்பு நெறிப்பட்டு அருளைக் கண்டுய்தற்கு அவரெல்லாம் ஒரு பற்றுக்கோடு. துறவியர்க்கு உரிய அருளும் கூட 'அன்பின் குழவி' என்று குறிக்கப்படுதல் ஈண்டு நோக்கற்பாலது. அன்பை மையமாகக்கொண்டு வாழ்ந்தவர்களின் உயர்வு ஏனைய மக்கட் குழாத்திற்குத் தொடர்ந்து பின்பற்றற்குரிய வழிமுறையாகும் என்பது இதனால் பெறப்பட்டது.

---

The excellence attained by the Conjugal enjoyers on earth is said to be the resuet of their tranquil life in love. (M. S. P)★

# அறத்திற்கே அன்புசார் பென்ப...

திரு. வ. பெருமாள். எம். ஏ , பி டி , எம். ஆர் ஏ எஸ் ,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி.
உரிகம். கோலார் தங்கவயல்.

குறள்-6. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்;
மறத்திற்கும் அஃதே துணை (76)

[பரிமேலழகர்:- அன்பு சார்பு அறத்திற்கே என்ப அறியார்-அன்பு துணையாவது அறத்திற்கேயென்று சொல்லுவர் சிலரறியார்; மறத்திற்கும் அஃதே துணை-ஏனை மறத்திற்கும் அவ்வன்பே துணையாவது.

ஒருவன்செய்த பகைமைபற்றி உள்ளத்து மறநிகழ்ந்தழி அவனை நட்பாகக்கருதி அவன்மேல் அன்புசெய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பார், மறத்திற்தும்அஃதே துணை என்று. "துன்பத்திற் கியாரே துணையாவார்," (குறள், 1299) என்புழிப்போல. இவை ஐந்து பாட்டானும் அன்பினது சிறப்புக் கூறப்பட்டது"

-ஆசிரியர் ]

அறத்திற்கு மட்டுந்தான் அன்புதுணை புரியும் என்று அறியாதவர்கள் பாவத்தை நீக்கவும், வீரத்தை உண்டாக்கவும் அன்பே துணை புரிகின்றது.

மனித உணர்ச்சியில் இரு கூறுகள் உண்டு. ஒன்று மென்மை; மற்றொன்று வன்மை. மென்மை ஈரமாக மலர்கின்றது; வன்மை வீரமாக மாறுகின்றது. மனித உள்ளம் ஈரத்திற்கும் வீரத்திற்கும் உறைவிடமாக இருக்கின்றது. ஈரத்தின் வடிவாகப் பெண்மை விளங்குகின்றது. வீரத்தின் வடிவாக ஆண்மை திகழ்கின்றது. நீர் பாய்கின்ற வயலில் கதிர் செழித்து விளைவதைப்போல,ஈரம் உள்ள நெஞ்சில் அன்பு அரும்பி மலரும். கழனியில் கதிர் விளைந்து எல்லோர்க்கும் பயன்படும் நிலையே அறுவடை. அதுபோல ஒருவன் உள்ளத்தில் மலர்ந்த அன்புணர்ச்சி செயல்படும்போது எல்லோர்க்கும் பயன்படும் அறமாகக் காட்சியளிக்கின்றது. அன்பின் ஒருபயன் இது. மற்றொரு பெரும் பயனும் உண்டு. விளக்கு இருளைப் போக்குவதைப் போல, அன்பு பாவத்தைப் போக்குகின்றது. அத்துடன் கொடுமை உள்ளத்தை வீர உள்ளமாகவும் மாற்றுகின்றது. 'இன்றுபோய் போர்க்கு நாளை வா' என்று இராமன் இராவணனைப் பார்த்துக் கூறும்போது,அவன் உள்ளத்தில் ஈரமும் வீரமும் இணைந்திருக்கிற பெற்றியைக் காண்கின்றோம். பகைவனுக்கும் அருள் புரிகின்ற உயர் பண்பிற்கு அடிப்படையாகவிருப்பது அன்பே என்பது தெளிவாகின்றது. அன்பு அரும்பி அருளாக மலரும்போது 'நான்' உணர்ச்சி 'நாம்' உணர்ச்சியாக விரிகின்றது.

---

The ignorant say that kindness is an ally of virtue., No, it is a defence against evil too. (V. R R.) ★

# என்பு இலதனை...

வித்துவான், தி. முத்து-கண்ணப்பர், எம். ஏ;
முதல்வர். மணலி தமிழ்க் கல்லூரி,
சென்னை-1.

குறள்-7. என்பு இலதனை வெயில்போலக் காயுமே
அன்பு இலதனை அறம். (77)

[பரிமேலழகர்:- என்பு இலதனை வெயில் போலக் காயும்-என்பில்லாத உடம்பை வெயில் காய்ந்தாற் போலக் காயும்; அன்பு இலதனை அறம்-அன்பில்லாத உயிரை அறக்கடவுள்.

என்பிலதென்றதனுன் உடம்பு என்பதூஉம், அன்பிலது என்றதனுன் உயிரென்பதூஉம் பெற்றும். வெறுப்பின்றி எங்கும் ஒரு தன்மைத்தாகிய வெயிலின்முன் என்பில்லது தன்னியல்பாற் சென்று கெடுமாறு போல, அத்தன்மைத்தாகிய அறத்தின்முன் அன்பில்லது தன் இயல்பாற் கெடும் என்பதாம். அதனைக் காயுமென வெயிலறங்களின் மேலே ஏற்றினுர், அவற்றிற்கும் அவ்வியல்புண்மையின். இவ்வாறு "அல்லவை செய்தாற்கு அறங்கூற்றம்" (நான்மணிக் 83) எனப் பிறருங் கூறினுர் "-ஆசிரியர்]

இக்குறளுக்கு, உரையாசிரியர் பதின்மருள், நால்வர் உரைகள் கிடைத்துள்ளன. "என்பில்லாத உடம்பை வெயிற் காய்ந்தாற் போலக் காயும் அன்பில்லாத உயிரை அறக் கடவுள்" என்ற கருத்தினை ஏறத்தாழ அவர்கள் நால்வரும் ஏற்பவர்களாகவே காணப்படுகின்றனர். பின்னுல்,

"Behold how the sun burneth the boneless worm, even so doth righteousness burn the man that doth not love."

என்பது வ. வெ. சு. ஐயர் அவர்களின் மொழிபெயர்ப்பு.

"Just as the lustrous sun doth burn
the boneless beings small,
So too will righteousness scorch
the loveless beings all."

[பக்கம் பதினுன்கில் காண்க]

[பக்கம் பதிமூன்றின் தொடர்ச்சி]

என்று ஆங்கில மொழியில் பெயர்த்துப் பாடுகிறார் திருவாசகமணி. இவர்கள் கருத்தும் முன்னைய நால்வரோடும் ஒத்தே காணப்படுகிறது.

என்பில்லாத உயிர், என்பது புழுவினைக் குறிக்கும். ஒரு புழு தன் னிச்சையாக ஊர்ந்து செல்கிறது; நிழலான இடத்திலிருந்து வெயிலில் சென்றுவிடுகிறது. வெயில் வரவரக் கடுமையாகிறது. எங்கே நிழல் எங்கே ஒதுக்குப்புறம் என்று எளிதில் பகுத்தறியவோ, விரைந்து வேறி டம் புகலடையவோ புழுவால் முடியாது. கடுமையால் சுட்டுப் பொசுக்கு கிறது வெயில். பாவம்! இறுதியில் துடிதுடித்து வெந்து, கருகிச் சாகிறது எலும்பற்ற அம்மெல்லுடற் புழு. 'இது புழு; மென்மையான உடம்பினது; கடுமையை உணர்ந்து விரைந்து நிழலை அடையும் உணர் வற்றது; இதனைக் காய்தல் கூடாது' என்றெல்லாம் எண்ணுந் தன்மை வெயிலுக்குண்டோ? வெயில், காற்று, மழை இவற்றிற்கு விருப்பு வெறுப்பில்லை;நல்லோர், அல்லோர் பாகுபாடில்லை;வேண்டியோர் வேண் டாதோர் என்ற வேறுபாடில்லை. இயற்கையின் நியதி அது.

எனவே, தானாகவே வெயிலில் வந்து சிக்கித் தீய்ந்து மாய்ந்தது அப்புழு.

இத்தகைய புழுவிற்கு ஒப்பிடுகிறார் அன்பில்லாத உயிரை வள்ளு வப் பெருமானார். வெயிலுக்கு ஒப்பிடுகிறார் அறக் கடவுளை. இதில்,மிகப் பொருத்தமான உவமை அணி செய்கிறது.

அன்பில்லாதவன் மனிதனா? உயர்திணையா? 'அன்பிலதனை-'அன்பு இல்லாததனை-என்று அஃறிணையில் அல்லவா கூறுகிறார். இத்தகைய அன்பில்லாத நடைப்பிணங்கள் தம் இயல்பாலேயே தருமதேவதையின் முன் கெட்டழியும். அஃதாவது, அவை அறக்கடவுள் முன் வலியவந்து, சிக்கி அக்கருணையைக் கண்டே கருகிச் சாகும்.

எப்படியெனின், பண்பாளன் ஒருவனுக்குத் தீமை செய்கிறான் ஒரு கயவன். ஆனால், அப்பண்பாளன் அதனைப் பொருட்படுத்தவில்லை. இயல்பாகவே அவன் வேறுபாடின்றிப் பரிவும்,அன்பும் கொண்டு ஒழுகு கிறான். இக்கண்ணியத்தைக் கண்ட அக்கயவன் தன் புன்மையை எண்ணி நாணிக் கழுவாயாகத் தற்கொலை செய்துகொள்வதைப்போல், அன்பற்றவன்,அறக் கடவுள்முன் தானாக அழிந்து விடுவான் என்பதே இக்குறளின் உண்மைக் கருத்து. ★

# அன்பகத்து இல்லா...

திரு. அ. தாமோதரன். எம். ஏ.,
மொழிஇயல் ஆராய்ச்சித்துறை,
கேரளப் பல்கலைக் கழகம்,
திருவனந்தபுரம்.

குறள்-8. அன்பு அகத்து இல்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த்து அற்று. (78)

[பரிமேலழகர்:- 'அகத்து அன்பு இல்லா உயிர் வாழ்க்கை-மனத்தின்கண் அன்பில்லாத உயிர் இல்லறத்தோடு கூடிவாழ்தல்; வன்பாற்கண் வற்றல் மரம் தளிர்த்தற்று-வன்பாலின்கண் வற்றலாகிய மரம் தளிர்த்தாற்போலும்.

கூடாதென்பதாம். வன்பால்-வன்னிலம். வற்றல் என்பது பால் விளங்கா அஃறிணைப் படர்க்கைப் பெயர்."—ஆசிரியர்]

நெஞ்சகத்து அன்பு இல்லாத உயிர் வாழ்வு வலிய நிலத்தில்-பாலையில்-உலர்ந்த மரம் தளிர்த்தலைப்போலும்.மரம் தளிர்த்துப் பயன் தராது அழியும்; அதுபோல, வாழ்வும் மலர்ந்து பயன் தராது நிலையறும்.

காரியம் காரணத்தின் பரிணமம். காரிய வெறுமை காரண வெறுமையைக் குறிக்கும். கரு இன்றி உரு இல்லையாகலான் மரம் தளிர்க்காது; உயிர் வாழ்வும் நிலைக்காது என்பது தெளிவு. ஆகவே, வாழ்வு அன்பின் விளைவு. அன்பற்ற நெஞ்சு பாழ்நிலம். அதன்கண் உயிர்பட்ட மரம். இரண்டிற்கும் ஆக்கமில்லை என்றலே இக்குறளின் கோட்பாடு.

அன்பு உள்ளத்தின் நெகிழ்ச்சி-உயிர்ப்பண்பு; மனத்தால் உணரக் கூடியது; புலன்களால் உணர்த்தவியலாதது. அது தொடர்பு உடையார் மாட்டும் இல்லார் மாட்டும் நிகழும் எனவே, அன்பை இல்லறத்தோடு மட்டும் தொடர்புறுத்திப் பொருள் காணல் முழுமை பெறாது. "குறள் அறநூல், பால், இயல், அதிகாரப் பாகுபாடுகளை உடையது" என்ற உணர்வே இவ்வாறு பொருள் காண்டற்கு அடிப்படை.அறநூல் பல்வேறு அறநிலை பற்றிக் கூறும் பல்திறப் பாங்கு— (Heterogeneous) உடையதாகவும்,ஒரு கருத்தைத் தொடராக எங்கும் ஊடுருவச் செய்யும் ஒரு திறப் பாங்கு (Homogeneous) உடையதாகவும் இருக்கலாம். இதனால் ஒரு கருத்தைத் தனியே வரையறுத்து நோக்குதலோடு,அதன் பல்வேறு காரண காரிய உறவனைத்தையும் ஒருங்கியைத்துத் தொடர்புற எண்ணுதலும் வேண்டும். இவ்வாறு தொடர்நிலை அமைப்பில் அறக் கருத்தினைச் சொல்லிப் பல்வேறு கருத்துக்களுடன் தழுவ வைத்து பொருள்

[பக்கம் பதினாறில் காண்க]

# புறத்துறுப் பெல்லாம்...

திரு. எம். ஏ. அமலோற்பவம். பி. ஏ,
முன்னாள் கல்வித்துறை இயக்குநர்,
எதியோப்பிய அரசாங்கம்,
பெங்களூர்.

குறள்-9. புறத்து உறுப்பு எல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துஉறுப்பு அன்பு இலவர்க்கு? (79)

[பரிமேலழகர்:- "யாக்கை அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு- யாக்கை அகத்தின்கண் நின்று இல்லறத்திற்கு உறுப்பாகியஅன்புடையர் அல்லாதார்க்கு; புறத்து உறுப்பெல்லாம் எவன்செய்யும்-ஏனைப் புறத்தின்கண் நின்று உறுப்பாவன எல்லாம் அவ்வறஞ் செய்தற்கண் என்ன உதவியைச் செய்யும்.

[பக்கம் பதினேழில் காண்க]

---

[பக்கம் பதினைந்தின் தொடர்ச்சி]

பாகுபாட்டில் ஓர் ஒருமைப்பாட்டினை இழையோடுமாறு அமைத்தல் அறநூல் இயல்புக்கு உரியதே. இத்தொடரமைப்பை ஒருங்கு எண்ணும் போது கருத்தின் ஆழ அகலங்களை உணர்தலால் அதன் நிறைவும், எல்லையும் விளங்கும்.

இம்முறையில் இக் குறட்பாவை அணுகினால், "அன்பு ஒரு தாய்ப் பண்பு;அதனின்று பிற பண்புகள் பிறக்கும்;அவையே உலகை வாழ வைக்கும்," என்ற உண்மை புலனாகும். இக்கருத்தைப் பிற குறட்பாக்கள் நூலெங்கும் விரவிநின்று-ஆனால் தொடர்பற்று-உணர்த்துகின்றன. எனவேதான். அன்பு,நாண்,ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மை என்பன சால்பின் தூண்கள் (983); அன்புடைமையும் ஆன்ற குடிப் பிறப்பும் பண்புடைமை (992);சால்பு குன்றின் உலகு நிலைக்காது(990); பண்புடையாரால் உலகு உண்டு; இன்றேல் அழியும் (996) என்றும் கூறினர்

இனி, அன்பு ஆர்வத்தை ஈனும்; அது நட்பை நல்கும் (74); நட்பு வினைக்கரிய காப்பு (781); இனம் தூயார்க்கு நன்றாகா வினை இல்லை (457); வினைநலம் வேண்டிய எல்லாம் தரும் (651); வினைக்கண் வினை கெடல் ஓம்பல் (612); வினையால் பொருள் உண்டு (675); பொருள் அன்பு ஈன் அருட்கிழவியைக் காப்பது (757); பொருள் அறன் ஈனும் இன்பமும் ஈனும் (754) என்றும் கூறினர்.

இவ்வாறு காரண காரிய வரிசை முறையில் பால், இயல், அதிகாரப் பாகுபாட்டினைக் கடந்து வள்ளுவர் அறங் கூறுகிறார் என்பதற்குச் சான்றாக இக்குறளைக் கொள்ளுதல் பொருந்தும்.

---

To live a life void of love is like a withered tree bursting in a barren land. (V. R. R.)

[பககம் பதினாறின் தொடர்ச்சி]

"புறத்து உறுப்பாவன இடனும், பொருளும், ஏவல் செய்வோரும் முதலாயின. துணையோடு கூடாத வழி அவற்றால் பயனின்மையின் 'எவன் செய்யு' மென்றார். உறுப்புப்போறலின், உறுப்பெனப்பட்டன. யாக்கையில் கண் முதலிய உறுப்புக்களெல்லாம் என்ன பயனைச் செய்யும், மனத்தின்கண் உறுப்பாகிய அன்பிலாதார்க்கு என்று உரைப்பாரும் உளர். அதற்கு இல்லறத்தோடு யாதும் இயைபில்லாமை யறிக."

—ஆசிரியர்.]

மனிதனுக்குக் கண், காது, மூக்கு, வாய், மெய், கை, கால் முதலிய வெளி உறுப்புகள் உள்ளன. அது போலவே, மனிதனின் உள் உறுப்பாகிய அகத்தில் அன்பு இல்லையெனின், மற்ற வெளியுறுப்புகள் இருந்தும் அவற்றால் ஒரு பயனுமில்லை. அவை இருந்தும் இல்லாததைப் போல அன்பே அகத்து உறுப்பு எனிலும் பொருந்தும்.

இருவகை உறுப்புகளும் உவமை; ஆதலால், இல்லறத்துக்கு அகத்து உறுப்பாவது அன்பு; புறத்து உறுப்பாவது இடமும் பொருளும் ஏவல் செய்வோருமாம். உயிர்வாழ இருந்தவர்களுக்கு உடலின் அகத்து உறுப்பு இல்லாவிடின், அதன் புறத்து உறுப்புகள் இருந்தும் பயன் இல்லாததுபோல. இல்லறஞ் செய்தற்கு அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாவிடின், புறத்து உறுப்பாகிய இடம், பொருள், ஏவல் செய்வோர் இருந்தும் பிரயோசனப்படாததினாலே 'எவன் செய்யும்' என்றார். இல் அறம் இனிது நடாத்த-அருள்வழி நடாத்த அன்பு வேண்டும். அன்பில்லாவிடத்து அருளுமில்லை; இல்லறம் நல்லறமாய் இயங்க இயலாது.

"இடனும் பொருளும் ஏவலரும் இருந்தும்பயன் என்னே வந்த
உடலின் பயனாகிய அன்பை உறாதவிடத்து."

(விநா. அரசி. 22)

எனுங்கருத்து இங்கு இணைத்து நோக்கத் தக்கது உடலின் பயனே அன்பு செய்தல்தான்,

அன்பு உயிர்க் குணமாதலின், உயிர் உறுப்பாகிய அன்பு என்று பொருள் கொள்ளலும் கூடும். இதனை, அடுத்துவரும் இவ்வதிகார இறுதிக் குறளிலும் "உயிர் நிலை" யென்றது காண்க.

---

What will all the external members (of the body) avail those who are destitute of love, the internal memler of the body? (Rev. Drew & J. Lagarus) *

# அன்பின் வழியது...

திரு. வி. எம். சுந்தரராசன்.
எம். ஏ; எம். எஸ்ஸி. (லண்) எம். ஐ. எம். எம்.,
(ஓய்வுபெற்ற) நந்திதுருகஸ் பொன் சுரங்கப் பேரதிகாரி,
பெங்களூர்.

குறள்-10. அன்பின் வழியது உயிர்நிலை; அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. (80)

[பரிமேலழகர்:- "அன்பின் வழியது உயிர்நிலை-அன்பு முதலாக அதன் வழிநின்ற உடம்பே உயிர்நின்ற உடம்பாவது; அஃது இலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த-அவ் அன்பு இல்லாதார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலால் போர்த்தனவாம்; உயிர் நின்றனவாகா.

"இல்லறம் பயவாமையின், அன்னவாயின. இவை நான்கு பாட்டானும் அன்பில் வழிப்படுங் குற்றங் கூறப்பட்டது."—ஆசிரியர்]

அன்புள்ள உடம்பே உயிருள்ள உடம்பு; அன்பில்லாத உடம்பு. உயிர் இல்லாத உடம்பு என்று கூறுகிறது இக்குறள்.

"நடைப்பிணங்கள்" (நடமாடும் பிணங்கள்) என்று உலக வழக்கில் கூறுவது இவர்களுக்குப் பொருந்தும்!

இங்கு, வள்ளுவர் கருத்தின்படி, 'அன்பு இல்லாவிட்டால், உயிரும் இல்லை' என்றாகிறது. உயிர் நிலைபெறுவது அறத்தினால். அறம் அன்பினால் வருவது; வளர்வது. அன்பில்லாத இடத்தில் அறமும் இல்லை. அதன்பின் இல் அறமும் இல்லை; துறவு அறமும் இல்லை. இல்லறத்தில் அன்பு அரும்பு காட்டுகின்றது; துறவறத்தில் அது அருளாக மலர்கின்றது. இல்லறத்தில் துறவறம் காக்கினும், துறவறத்தில் இல்லறம் காக்கினும் இதுவே நியதி.

எனவே, அகத்தில் அன்பற்றவன் இல்லறத்திற்கும் தகுதியில்லை; துறவறத்திற்கும் தகுதியில்லை! அதன்பின் அவன் கடைத்தேறும் வழி ஏது? இகத்திலும், பரத்திலும் அவனுக்கு சுகமில்லை அவனால் மற்றவர்களுக்கும் சுகமில்லை.

பிறவிப்பெருங்கடலைக் கடந்து இறைவனடி சேர்வதுதான் மனிதப் பிறவியின் இலட்சியம். அறஆழி அந்தணனாகிய அப்பரம்பொருளின் இணையடிகளைப் புணையாகப் பற்றினாலன்றிப் பிறவிப் பெருங்கடலை நாம் நீந்திக்கடக்க இயலாது. "பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார் இறைவனடி சேராதார்" என்று முன்னர், எடுத்த எடுப்பிலேயே கூறினாரன்றோ வள்ளுவர் பெருமான்!

[பக்கம் பத்தொன்பதில் காண்க]

[பக்கம் பதினெட்டின் தொடர்ச்சி]

இறைவனே அறக்கடல் அன்பே உருவானவன். அன்பினைக் கொண்டே அவனை அணுகுதல் இயலும். காசு பணம் கொண்டும், விளம்பர ஆடம்பர ஆரவாரத் தன்மைகளைக் கொண்டும் அவ் இறைவனை அணுகுதல் இயலாது. அவன் "அன்பருக்கு அன்பன்!" (மணிவாசகர் வாக்கு) பக்திவலையில் மட்டுமே படுபவன். பக்தியோ, பணம் கொண்டு பெறும்பொருளன்று! அன்பின் முதிர்நிலையே பக்திநிலை ஒருவன் உள்ளத்தில் அன்பு என்பதே இல்லாதபோது, பக்தி அவனுக்கு எங்கிருந்து வரும்?

காஞ்சிக் காவலன் கருங்கல்கொண்டு பெரிதாகக்கட்டிய கோயிலில் போய் முதலில் குடிபுகுவதைக் காட்டிலும், ஏழைப் பூசலார் பெருமான் அன்பின் முதிர்ச்சியால், தன் மனதிலேயே இறைவனுக்குக் கட்டிய கற்பனைக் கோயிலில் முதலில் குடிபுகுவதையே அன்பருக்கன்பனான அம்மரம் பொருள் விரும்பினான். இதனைப்பூசலார் புராணம் பெருமையுடன் பேசுகிறது,

"நீண்டசெஞ் சடையினார்க்கு நினைப்பினால் கோயிலாக்கிப்
பூண்டஅன்பு இடையறாத பூசலார் பொற்றாள் போற்றி"

என்று பாடிப் பரவுகிறார் சேக்கிழார் பெருமான்.

இறைவன் அன்பே உருவானவன் என்று மேலே கூறினோம்.

"அன்புஞ் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்பது திருமூலர் வாக்கு. ஆச்சார அனுட்டானம் அறியாத வேடன் கண்ணப்பனின் மாசற்ற அன்பிற்கு இறைவன் கட்டுப்பட்டதை, "கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு இன்மை கண்டபின், என்னப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளினான்" என்று மனம் உருகிப் பாடுகிறார் மணிவாசகப் பெருமான்.

எனவே, அகத்தில் அன்பற்றவன் நடைப்பிணம் எனக்கூறிய கருத்து பொருத்தமே. அன்பை வளர்ப்பது மக்களின் தலையாய கடமை, நெறி, பண்பு என வற்புறுத்துக்கிறது இக்குறள்.

---

"That body in the dwelling of a soul which Came in the path of love; the body of those who are without love is merely bone Coured with skin" (Rev. Dt. J. L) ★

திருக்குறள் இசைக்கனி.

# அன்பின்றேல் வழியேது?

(ஆசிரியர், ப. கண்ணன்)

இராகம்-பியாக்டை. தாளம்-சாபு.

## எடுப்பு.

துன்பும் துயரும் கண்டபோது—அன்புடனதை
துடைப்பதில் சிறுமை வராது (துன்)

## தொடுப்பு.

என்பு இலதனையே வெயில்போலக்காயுமே
அன்பு இலதனையே அறம் என்ற ஞாயிறு (துன்)

## படுப்பு.

அறிவுக்கு எல்லையேது பரிவுக்குப் பகையேது
அனைத்துள்ளும் அன்புடமை விளைத்திடும்போது

## முடிப்பு.

நெறியோடு வாழ்வதிலும் அருளின்றேல் பொருளேது
நேயம்வளருதற்கும் அன்பின்றேல் வழியேது (துன்)

## முடுகு.

புனிதமோ டுயர் மனிதமாமனம்
கனியும் வகையினில் இனிமைசெய்குவம் (துன்)

அகத்துள் முளைத்து மலர்வது
புறத்தும் மணக்கும்செயலது (துன்)

தித்திக்கும் குறளற நெறியினில்
சித்திக்கும் பயனுற மிகுதியும் (துன்)

# தமிழ் அன்னை உங்களை வேண்டுகிறள்.

தமிழரின் தேடக் கிடைக்காத செல்வம் திருக்குறள். அதன் மணம் பரப்பும் அரிய பணியைச் செய்து வருகிறது. "குறள் மலர்". தமிழ் மொழிப் பற்றும், தமிழ் நெறியில் பற்றும் உள்ளோர் தாமாக முன்வந்து 'குறள் மலர்' வளம்பெற உதவ வேண்டும்.

"குறள் மலர்" புரியும் அரிய பணியைப் பாராட்டி வாழ்த்துக் கூறுவோர் பலர், அவர்களுக்கு எமது நன்றி. எனினும் வெறும் வாழ்த்துதல் மட்டும் போதாது; செயலில் ஆதரவு தந்து உதவவும் வேண்டும்.

திங்கள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து, ஐந்து மலர்களைப் பெற்று உங்கள் நண்பர்களிடம் மலரைப் பரப்புங்கள். இது பெரிய அறம்; தமிழன்னைக்கு நீங்கள் செய்யும் திருப்பணி; தெய்வப்பணியும் ஆகும்.

இவ்வாறு செய்ய மனமிருந்தும், உங்கள் பொருளாதாரம் இதற்கு இடந்தராவிடில், உங்களுக்குமட்டும் திங்கள்தோறும் ஒரே 'குறள் மல'ரைப் பெற்று ஆதரியுங்கள். அஞ்சல் செலவு உட்பட நீங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் **3**, முன்பணம் செலுத்தினுல் போதும்; மலர் உங்களைத் தேடிவரும்.

தமிழர்கள் என்போர், தமிழ்ப்பற்று உடையோம் என்போர், தமிழர் வாழ்வு சிறக்கப் பணிபுரிகிறேம் என்போர் மனமுவந்து முன்வந்து 'குறள் மலரு'க்கு ஆதரவு தந்தருளுதல் வேண்டும்; தங்கள் நண்பர்களின் ஆதரவையும் தேடித்தந்து இப்பெரும் பணியில் தங்களின் நல் ஆதரவைச் செயல் மூலம் தந்தருளப் பணிவன்புடன் வேண்டுகின்றேம். இதைத் தமிழ் அன்னையின் வேண்டுகோளாக மதியுங்கள்.

இங்ஙனம்,


பதிப்பாசிரியர், **'குறள் மலர்'**

பழைய லேபர் யூனியன் கட்டிடம்,
நந்தி துருகம். உரிகம் அஞ்சல்,
கே. ஜி. எஃப், மைசூர் மாநிலம்.

# சிவகாமி

* *

நல்ல பொழுதுபோக்குத்

திங்கள் ஏடு.

| | |
|---|---|
| ஆண்டு சந்தா | ரூ. 3—00 |
| தனிப்படி | 25 காசு |

வாங்கிப் படியுங்கள்!

சந்தா சேருங்கள்!!

முகவரி

ஏ. நாராயணன்

ஆசிரியர், வெளியிடுபவர்

சிவகாமி

5, இரண்டாவது தெருவு,

வடக்கு கோபாலபுரம்,

சென்னை-6.